**சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**

**வாராந்த பாடசாலை**

**பாடம் - சித்திரக் கலை** **வாரம் - 03**

**தரம் - 08** Prepared by – Embilipitiya Educational Zone.

- **பாரம்பரிய பித்தளைக் கைத்தொழில்**

- பித்தளை பொருட்களின் நிர்மாணப் பணி 18ம் நூற்றாண்டு காலத்திலேயே பிரபல்யம் அடைந்தது.
- செம்பு, நாகம் ஆகிய உலோகங்கள் உரிய விதத்தில் சேர்த்து பித்தளை தயாரித்துக் கொள்ளப்படும்.
- பல்வேறு தேவைகளின் பொருட்டு இந்த பித்தளை ஊடகத்தால் நான்கு வகையான பாண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

1. பயன்பாட்டுப் பாண்டம்- பாக்கு வெட்டி, செம்பு, குடம், கூசா

2. கட்டட வேலையில் வீட்டுப் பண்டங்களாகவும் பயன்படும் பொருட்கள்- ஆணி , திறப்புத் தொளைத்தகடு, திறப்பு , தாழ்ப்பான்.

3. அலங்கார பண்டம்- சுவர் அலங்கரிப்பு, பிராணிகள் வடிவம்.

4. சமயக் காரியங்களுக்கு தேவையான பாண்டம்- ஆலவட்டம், தாதுபேளை, தட்டம், திருகாணி

பித்தளைப் பாண்டங்கள் நிர்மாணிக்கப்படும் இரண்டு முறைகள்
1. தகட்டு வேலை (தட்டுதல் வேலை)
2. வார்ப்பு வேலை

பித்தளை வார்ப்பு வேலை இரண்டு வகைப்படும்
1. மெழுகு வார்ப்பு
2. மண் வார்ப்பு

இலங்கையில் பித்தளைக் கைத்தொழில் நடைப்பெறும் பிரதேசங்கள்.
1. கண்டி- பமுனுவ, கடலாதெனிய, பிலிமதலாவ, கிரிவவுன, தவுளகல
2. மாத்தறை- பொலியத்த பிரதேசத்தில் அங்குன்மடுவ
3. யாழ்ப்பாணம்- வண்ணார் பண்ணை
4. மட்டக்களப்பு- பெரிய போரதீவு

**வினாக்கள்**

1. பித்தளைப் பொருட்கள் எத்தனையாம் நூற்றாண்டில் இருந்து நிர்மாணிக்கப்பட்டு வருகிறது?
2. பித்தளை எவ்வாறு உருவாக்கப்படுகிறுது?
3. பல்வேறு தேவைகளின் பொருட்டு நிர்மாணிக்கப்படும் பாண்டங்கள் 4 வகையினையும் எழுதுக.
4. பித்தளைப் பொருட்கள் நிர்மாணிக்கப்படும் 2 நுட்ப முறைகளைக் குறிப்பிடுக.
5. பித்தளை வார்ப்பு வேலையின் 2 முறைகளையும் குறிப்பிடுக.
6. இலங்கையில் பித்தளை கைத்தொழில் இடம் பெறும் பிரதேசங்களைக் குறிப்பிடுக.
7. பித்தளை பொருட்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
8. செம்பும், நாகமும் சேர்த்து உருவாக்கப்படுவது எது?

- **அறுவடை செய்யும் ஆண்களும், பெண்களும்.**

கருத்து வெளிப்படும் சித்திரம்
தலைப்பு – அறுவடை செய்யும் ஆண்களும், பெண்களும்.

விதிமுறைகள் :- தலைப்பு (பொருத்தப்பாடு)
உருவ ஒழுங்கமைப்பு
வர்ணப்பிரயோகம்
தளப் பயன்பாடு
பூரணத்துவம்

இவைகள் உள்ளடங்கும் வகையில் கருத்து வெளிப்பாட்டு சித்திரம் வரைதல் வேண்டும்.
(உ+ம்)

- **பெயர்ப் பலகை வடிவமைத்தல்.**

1) தலைப்பு- வர்த்தக நிலையத்திற்கு பொருத்தமான பெயர்ப் பலகை ஒன்றினை நிர்மாணித்தல்.

பின்வரும் விடயங்களை உள்ளடக்கி பெயர்ப்பலகை வடிவமைத்தல் வேண்டும்.

1. மொழி ( தமிழ், ஆங்கிலம்)
2. எழுத்துக்களின் வடிவம், தன்மை.
3. பெயர்ப் பலகையின் அலங்கார வடிவம்/ உருவம்.
4. கவர்ச்சி/ ஈர்ப்பு
5. வர்ணப் பிரயோகம்.
6. பூரணத்துவம் (பொருத்தப்பாடு)

மேற்கூறிய விடயங்களை உள்ளடக்கி ஒரு சிறப்பான முறையில் வர்த்தக நிலையம் ஒன்றுக்கான பெயர்ப் பலகை வடிவமைத்தல் அவசியம். அத்தோடு அனைவருக்கும் வாசிக்கக் கூடிய வகையிலும், பெயர்ப் பலகையில் ஈர்ப்புத் தன்மை அமைதல் வேண்டும்.
மேற்கூறிய விடயங்களை கருத்திற் கொண்டு வரைதல் வேண்டும்.

- **அசையும், அசையா பொருட்கள் வரைதல்.**

1) தலைப்பு – முப்பரிமாண உருவம் வரைதல்.
(பொருள் கூட்டம் வரைதல்)

:- சிலிண்டர் வடிவ பாத்திரத்தில் வைக்கப்பட்ட குரோட்டன் கிளை, வெள்ளைத்தாள் சுத்தப்பட்ட பெட்டி, பப்பாசிப் பழம், இளநீர் வரைதல்.

2) பின்வரும் விடயங்களை உள்ளடக்கி முப்பரிமாண பொருட்கள் வரைதல் வேண்டும்.

அவையாவன :-
1. தலைப்பு
2. உருவங்களின் தன்மை, புறவியல்பு
3. தளப்பயன்பாடு (கண்மட்ட அமைப்பு)
4. தூரதரிசனம்.
5. ஒளி நிழல்
6. வர்ணப் பிரயோகம்
7. பூரணத்துவம்

இவைகள் உள்ளடங்கும் வகையில் வரைந்து சிறப்பான வர்ணம் பிரயோகித்து முப்பரிமாண உருவங்களை வெளிப்படுத்தல் வேண்டும்.

(உ+ம்)

படம் - 01



படம் - 02

